**செ. கு. எண்**: 153 **நாள்**:18.04.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 18.4.2012

சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அங்குராஜ் என்பவரின் மகன் சதீஷ்குமார் 25.3.2012 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த அரசு பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 9.4.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திரு. சதீஷ்குமார் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான சதீஷ்குமாரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**